புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# “இலங்கைப் பயணக் கதை” பதிவுசெய்யும் பண்பாடு

முனைவர் சு.திரிவேணி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

ஆய்வுச்சுருக்கம்

பயணம் என்பது ஒரு கலை. முற்றிலும் புதிதான இடங்களுக்குச் செல்வதும் அந்தச் சூழலில் மகிழ்வுடன் பொருந்திப் போவதும் மனித உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்ச்சியைத் தரும். இத்தகைய அனுபவங்களைத் தற்போது சமூக வலைதளங்களில் பதிவிடுவது பல்கிப் பெருகி இருக்கிறது. தமிழில் பயண இலக்கியம் ஒரு பெரும் துறையாக இருந்தது. பயணம் செல்லும் இடம், வழிகள், தங்குமிடம் போன்ற அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிய வழிகாட்டிகளாக பயண நூல்கள் இருந்துள்ளன. அவ்வகையில் ஆனந்த விகடன் இதழ் ஆசிரியராக இருந்து பின்னர் இதயம் பேசுகிறது என்ற பெயரில் பத்திரிகை தொடங்கி நடத்திய திரு.மணியன் அவர்களின் "இலங்கைப் பயணக் கதை" என்ற நூல், 1979 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மணியன் பதிப்பகத்தின் மூலம் வெளியானது. இலங்கையின் பல பகுதிகளுக்கும் நெருக்கடியான காலகட்டத்தில் பயணித்த மணியனின் இந்த நூல் வாயிலாக இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள், சிங்களவர்களின் வாழ்க்கை, நம்பிக்கைகள், மக்கட்பண்புகளையும் அவர்களின் பண்பாட்டுச் சிறப்புகளையும் அறியலாம்.

திறவுச்சொற்கள்
பயணஇலக்கியம், இலங்கை, தமிழர், பண்பாட்டுப்பதிவு

## முன்னுரை

பயணங்கள் மனித மனதைப் பண்படுத்தும் ஆற்றல்மிக்கவை. தமிழர் வாழ்வில் பயணங்கள் எப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. ஒரு இடத்தை, மக்களை, வாழ்க்கை முறைகளை, தேவைகளை, சிறப்புகளை அறிந்து கொள்ளப் பயணங்கள் பெரிதும் துணைநின்றன. எனவேதான் மன்னர்கள், அதிகமாகப் பயணங்களை மேற்கொண்டிருந்த புலவர்களுக்கு மரியாதை தந்தனர். பிற நாட்டின் சிறப்புகள், நல்லியல்புகளை அறியவும் தன் நாட்டில் மக்களின் நிறை,குறைகளை அறியவும் அவற்றின் உண்மைத்தன்மை குறையாமல் எடுத்துரைக்கவும் மன்னர்களுக்குப் புலவர்கள் உதவினர்.

பயணங்களின் மீதான தீராக் காதல் கொண்டவர்கள் சங்கப் புலவர்கள். வறுமையால் பாதிக்கப்பட்ட தன் சுற்றத்தின் பசிக்கொடுமை நீங்க வள்ளலை நாடிப் பரிசு பெறும் அவர்கள், தான் பெற்ற பரிசுகளை தமக்கான சேமிப்பாக மாற்றாமல் அனைவருக்கும் பகிர்ந்தளித்து மீண்டும் வறுமையுற்றவர்களாக மாறும் நிலையை சங்கப்பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது யாதெனில், புலவர்கள் பரிசிலுக்காக, அதாவது தன் வறுமையைப் போக்குவதற்காக பயணங்களை மேற்கொள்வதில்லை; மாறாக பயணங்களின் மீதான அவர்களது ஆர்வமே அவர்களைச் செல்லத் தூண்டுகிறது என்பதாகும்.

தன் சுக - துக்கங்களுக்கு முதன்மை இடம் அளிக்காமல் தேடல் உணர்வுடைய மனிதர்களாக சங்கப் புலவர்கள் இருக்கிறார்கள். இவர்களால் பரந்துபட்ட மக்களை, நிலத்தை, ஆட்சியாளர்களை, அரசமைப்பைக் காண முடிகிறது. அதன் மூலம் கிடைக்கும் அனுபவமும் அறிவும்தான் புலவர்களின் மிகப்பெரிய தகுதியாகும். அப்படிப்பட்ட புலவர்களே

மன்னவர்களால் பெரிதும் மதித்துக் கொண்டாடப்பட்டார்கள். ஏனெனில் அவர்களது அறிவால் கிடைக்கும் பயன், தனக்கும் தன் மக்களுக்கும் உதவும் என மன்னர்கள் கருதினார்கள். புலவர்களின் பயணங்கள் வறுமையைத் தீர்க்கும் நோக்கம் கொண்டது போல் காணப்பட்டாலும் அப்பயணங்களால் பெற்ற அறிவே அவர்களுடைய சிறப்பாகும்.

இலங்கைச் சூழல்

மணியன் அவர்கள் பயணித்த காலத்தில் இலங்கையில் இனிமையான சூழல் இல்லை. அவர் பத்திரிக்கைத் துறை சார்ந்த, தன் சுய அடையாளத்தோடு அங்கே செல்லப் பலமுறை முயன்றபோதும் அனுமதி கிடைக்கவில்லை. இறுதியாக அவர் கதிர்காமத்துக்குச் செல்லும் புனித யாத்திரைப் பயணியாக விண்ணப்பித்துத்தான் இலங்கை செல்ல அனுமதி பெறுகிறார். பிறகு நண்பர் ஒருவர் அறிவுரைப்படி, இலங்கைப் பிரதமர் ஜெயவர்த்தனாவுக்கு தன்னைப் பற்றிய உண்மையான தகவல்களுடன் நண்பர் ஒருவர் மூலம் பரிந்துரைக் கடிதம் எழுதி அனுமதியும் பெறுகிறார்.

ராமேஸ்வரத்தில் இருந்து 35 மைல்கள் தூரம் மட்டுமே இருக்கும் இலங்கைக்குச் செல்ல, மக்கள் குறுக்கு வழிகளை நாட வேண்டியிருக்கிறது என்ற அரசியல் சூழலில்தான் இலங்கையில் கால் பதிக்கிறார் மணியன்.

தென்னிந்தியாவின் ஒரு பாகமாகவே இலங்கை இருந்தது என்ற வரலாற்று ஆய்வாளர்களின் முடிவுக்கு ஏற்பவே விலங்குகள், மரங்கள், கடவுள், வாழ்க்கைமுறை, புராணக் கதைகள் போன்ற பல கூறுகளில் ஒற்றுமைகளை எடுத்துரைக்கும் அவர், இலங்கையில் பெருகி இருக்கும் ஜப்பானிய மோட்டார் வாகனங்களைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறார்.

தொழில்கள்

விவசாயம் இலங்கையின் முதன்மைத் தொழில். யாழ்ப்பாணத்தில் கள்ளிறக்கும் தொழிலும் முதன்மையானதாக உள்ளது. அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் போது கழனிகளில் எருமை மாட்டைப் பூட்டி உழுவுவதைக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். கொழும்புக்கருகில் பஸ்யால என்ற இடத்தில் முந்திரி விற்பவர்கள் பற்றிக் குறிப்பிடுகிறார்.

தேயிலைத் தோட்டங்கள் பெரும்பாலும் அரசுக்குச் சொந்தம். தொழிலாளர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள். தொழிலாளர்களுக்கான வாழிடம், அடிப்படை வசதிகளோ மிகக் குறைவு. பிபிசியில் இது பற்றிய செய்தி வெளியானதும் இலங்கையில் தேயிலை விற்பனையும் ஏற்றுமதியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சுமார் மூன்றரை லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட, கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய தொழிலாளர் நிறுவனம். அதன் தலைவர் தொண்டைமானிடம் தொழிலாளர்கள், இலங்கை மக்கள் வாழ்க்கை பற்றி உரையாடுகிறார் ஆசிரியர். மலையின் சரிவுப் பகுதியில் படிப்படியாக நிலத்தை அமைத்து நெல் விளைவிக்கும் முறை இலங்கையிலும் ஜாவாவிலும் தான் நடைமுறையில் உள்ளது.

உணவு

இலங்கை தமிழ்நாட்டுக்கு மிக அருகில் இருந்தாலும் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்தாலும் தமிழ்நாட்டில் இருப்பது போல் இலங்கையில் உணவு கிடைக்கவில்லை என்கிறார். இட்லி அரிதானது. இடியாப்பம், தேங்காய் எண்ணெயில் செய்யப்பட்ட உணவுகள் அதிகம். பருப்பு இறக்குமதி செய்ய தடைகள் இருந்ததால் சாம்பார், சாப்பாடு என எல்லாவற்றிலும் மாறுபட்ட சூழல் இருந்தது என்கிறார். யாழ்ப்பாணத்தில் கேரளத்தை ஒட்டிய வாழ்க்கைமுறை, உணவுப் பழக்கங்கள் இருக்கின்றன.

சமயம், வழிபாடு

இலங்கை மக்கள் தீவிர சமயப்பற்றுக் கொண்டவர்கள். புகையிலை சுருட்டும் தொழிலாளர்கள், கம்பராமாயண உரையை ஒருவர் வாசிக்கக் கேட்ட வண்ணம் சுருட்டுகிறார்கள் என்பதைக் குறிப்பிடும்போது இங்கே மக்களுக்குத் தமிழ்ப்பற்று சுடர் விடக் காரணங்களில்

இதுவும் ஒன்று என்று குறிப்பிடுகிறார். மக்கள் வாழ்வியலோடு பக்தியும் தமிழுணர்வும் அதிகத்தாக்கம் பெற்றிருந்ததை இச்செய்திகள் புலப்படுத்துகின்றன.

இலங்கையில் சிவன் கோயில்கள் அதிகம். இராஜராஜசோழன் இலங்கையின் அனுராதபுரம் என்ற தலைநகரை அழித்து பொலநறுவையில் புதிய தலைநகரை உருவாக்கி இருக்கிறார். நிறைய சிவன் கோயில்களைக் கட்டமைத்திருக்கிறார்.

இந்தியாவின் பீகாரில் உள்ள கயாவில் புத்தர் ஞானோதயம் பெற்ற போதி மரத்தின் கிளை பற்றியும் 2200 ஆண்டுகள் பழமையான அந்தக் கிளையை அசோகரின் மகள் சங்கமித்திரை இலங்கைக்குக் கொண்டு வந்ததைப் பற்றியும் குறிப்பிட்டு, மன்னர்கள் மட்டுமல்லாமல் ஆங்கிலேயர்களுக்கும் அந்தக் கிளையின் புனிதத் தன்மையில் இருந்த மதிப்பைக் குறிப்பிடுகிறார்.

புத்தரின் திருப்பல் வைத்திருக்கும் தலதா மாளிகைக் கோயிலானது 365 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் இருந்து ஒரு இளவரசியால் கொண்டு வந்து கண்டியில் கோவிலாக நிர்மாணிக்கப்பட்டது. ஹட்டன் என்ற இடத்திலுள்ள சிகரமானது சிவனொளி பாத மலை, ஆடம்ஸ் பீக், ஸ்ரீபாத என்று அழைக்கப்படும். இந்த இடம், இந்துக்கள், பௌத்தர், முஸ்லிம் என அனைவருக்குமான புனித இடம். தோவை என்ற இடத்தில் புத்தர் கோயிலில் பெருமாள் உற்சவம் இணைந்து நடக்கிறது. கொழும்பிற்கு அருகில் சிலாபம் என்ற ஊரில் உள்ள முனீஸ்வரன் கோயிலுக்கு புத்த மதத்தினரும் வந்து போகிறார்கள். பகுத்தறிவுவாதியும் ஸ்ரீ சத்யசாய் பாபாவை கடுமையாக எதிர்த்தவருமான கோபுரையும் இலங்கையில் சந்திக்கிறார்.

இவ்வாறான பல சான்றுகளை, நிகழ்ச்சிகளை மணியன் குறிப்பிடுகிறார். இதன் மூலம் இலங்கை மக்கள் ஆழ்ந்த சமயப்பற்றுக் கொண்டிருந்தாலும் மதவெறி கொண்டவர்களாக இருக்கவில்லை என்பதும் பிற சமயத்தவரோடு இணைந்தும் அவர்களது விழாக்களைத் தங்களது ஆலயங்களில் மகிழ்ச்சியாகக் கொண்டாடும் உயர் மாண்புமிக்கவர்களாக இருந்ததும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் கல்வி

பள்ளி, கல்லூரி மாணவர்களையும் ஆசிரியர் சந்திக்கிறார். இலங்கையில் பொதுவாகவே கல்வியை செயல்பாட்டு முறையில் கற்பிக்கும் முறை காணப்படுகிறது. இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் போன்ற அமைப்புடையது என்று சொல்லப்படும் பேராதனைப் பல்கலைக்கழகம் செல்கிறார் திரு.மணியன் அவர்கள். சுமார் 6000 மாணவர்கள் படிக்கிறார்கள். பேட்ரிக் அபுக்ராம்பே என்ற பிரிட்டிஷ் கட்டடக்கலை நிபுணரின் கற்பனையில் உருவானது பேராதனைப் பல்கலைக்கழகம்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பூங்காவில் ஸ்டூடண்ட்ஸ் கார்டன் பகுதியானது தாவரவியல் படிக்கும் மாணவர்களுக்காகப் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

அரசியல் தலைவர்களுடனான சந்திப்பு

இலங்கையின் முன்னாள் பிரதமரான சிரிமாவோ பண்டாரநாயகவின் ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு அவர் மீதும் அவர் மகன் மீதும் விசாரணைகள் நடைபெற்று வந்ததோடு, பத்திரிகைகள் அவர்களுக்கு எதிராகக் காரசாரமாக எழுதி வந்த சூழலில் ஒரு பத்திரிக்கையாளராக அவரை சந்திக்க விரும்பினார். திரு.மணியன் அவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒரு பார்வையாளராகத் தான் முதலில் சிரிமாவோ பண்டாரநாயகவைக் காண்கிறார் திரு.மணியன். ஊழல், இலங்கையின் வாட்டர் கேட் சூழ்ச்சி என்று தீவிரமாகத் தொடர்ந்த விவாதத்தின் முடிவில் சிரிமாவை ஆளும் கட்சி உறுப்பினர்கள் சூழ்ந்து கொள்ள, கலவரமாக உருவெடுக்கும் சூழலில் அவரைப் பாதுகாப்பாக வெளியில் அழைத்து வந்தவர் தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம் என்று பெருமையோடு பதிவு செய்கிறார்.

இலங்கை வரலாறு

600 ஆண்டுகளுக்கும் மேலாகத் தலைநகரமாக இருந்த அனுராதபுரமானது சிங்களவர் இனத்தையே நிறுவிய விஜயனின் சீடரான அனுராதாவினால் நிர்மாணிக்கப்பட்டது என்று ஆசிரியர் குறிப்பிடும்போது, சிங்கள வம்சத்தின் தோற்றுவாயாகவும் அடையாளமாகவும் தலைநகரமாகவும் விளங்கிய அனுராதபுரத்தை அழித்துவிட்டு இராசராசன் புதிய நகரம்

*நிர்மாணித்த வரலாற்றின் அடிப்படையில் இந்த இனவாதமும் வெறுப்பும் எழுந்திருக்கக் கூடும் என்பதை அறிய முடிகிறது. அனுராதபுரத்தை அழித்து இராசராசன் உருவாக்கிய தலைநகரமான பொலநறுவையும் காலப்போக்கில் நிலைத்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

*தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் இலங்கை வரலாறு பற்றிக் கூறும் போது "இலங்கையில் அந்தக் காலத்தில் மூன்று மாநிலங்கள் இருந்தன. வடஇலங்கையும் கிழக்குப் பகுதியும் தமிழர்களும் மேற்குக்கரை மற்றும் மத்தியப் பகுதியில் சிங்களவர்களும் இருந்தனர். ஆனால் 1948இல் இலங்கைக்கு ஆங்கிலேயர் சுதந்திரம் வழங்கிய போது இலங்கையை ஒன்றாக்கி சிங்களவர்களுக்கு மொத்த ஆட்சி உரிமையையும் கொடுத்தனர். தமிழர்களின் அரசியல், சமூக உரிமைகள் பறிக்கப்பட்டது" என்கிறார். (ப. 64)*

*மதத்தின் பெயரால் இந்தியாவைப் பிரித்து சூழ்ச்சி செய்தனர் ஆங்கிலேயர்கள். இன்றளவும் அவர்களின் சூழ்ச்சி வெற்றி பெற்றுக் கொண்டே இருக்கிறது. அதேபோல் இன வெறுப்பை இலங்கையில் ஏற்படுத்தியதும் ஆங்கிலேயர்கள்தான். ஆங்கிலேயர் சூழ்ச்சியோடு, அரசியல் தலைவர்களின் சுயநலமும்தான் இலங்கையில் பிரிவினைவாதச் சிந்தனைகளையும் வெறுப்பையும் விதைத்துள்ளது. இதை உணர முடியாத பொதுமக்கள் காலங்காலமாக இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.*

*மக்கள் மனநிலை*

*யாழ்ப்பாணத்தில் ஒரு சின்னஞ்சிறிய பெட்டிக்கடைக்காரர் ஆசிரியரை அடையாளம் கண்டு பேசுகிறார்.*

*"கப்பல் வரவேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தீர்களோ? என்று கேட்டார் அவர். 'நீங்கள் சொல்வது புரியவில்லையே. நான் பறந்து தானே வந்திருக்கிறேன்' என்றேன். 'எங்கே சார் பறந்து வந்தீர்கள்? ஊர் உலகமெல்லாம் சுற்றி விட்டு உங்கள் கூடப் பிறந்தவர்கள் இங்கே அடிபட்டு, நசுங்கி, கண்ணீர் விட்டு ஓய்ந்த பிறகு தானே வந்திருக்கிறீர்கள்?" (ப.43)*

*என்று கேட்கும்போது, வெறும் 35 மைல்கள் தொலைவில் இருக்கும் மக்களின் கதறலை, வேண்டுதலை உணராமல், உணர்ந்தும் உதவ இயலாத இயலாமையில் இருந்திருக்கிறோமே என்ற குற்ற உணர்வை ஏற்படுத்திவிடுகிறார் அவர். வரிசையாகக் கட்டியிருந்த தனது 131 கடைகள் அனைத்தும் கலவரத்தில் எரிந்து போனதாகக் கூறும்போது கலவரத்தின் தாக்கம் புலப்படுகிறது. அத்தகைய சூழலிலும் தமிழ்நாட்டில் எம்ஜிஆரும் கலைஞரும் பிரிந்துவிட்டதைப் பற்றிப் பெரிதும் வருந்துகிறார்கள்.*

*"'ஆங்கிலத்தில் சொல்வதுண்டு- 'மிக அருகில் இருக்கிறோம் ஆனால் எட்ட முடியாத தொலைவில் இருக்கிறோம்' (So near and yet so far). அது எங்களுக்கு மிகவும் பொருந்தும். தமிழ்நாட்டுக்கு நாங்கள் மிகவும் நெருங்கிய பக்கத்து வீட்டுக்காரர்கள். ஆனால் எட்ட முடியாதபடி ஒரு பெரிய இடைவெளி தொடர்ந்து கொண்டே இருக்கிறது' என்றார் ரங்கநாதன். அவருடைய ஆசை, ஏக்கம் எதையும் அவர் மறைக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் எங்கே போனாலும் தமிழர்கள் யாரைச் சந்தித்தாலும் இந்த உணர்ச்சியை அடித்தளத்தில் உணர முடிகிறது. மெல்லிய இசை போல அது அடிநாதமாக கேட்டுக்கொண்டே இருக்கிறது". (ப. 49)*

*யாழ்ப்பாணத்தில் தனி ஈழம் பற்றி அதிகம் பேசுகிறார்கள். அதில் மாறுபட்ட கருத்துகளும் உள்ளன. நூல் முழுவதும் இலங்கையில் கண்ணுக்குப் புலப்படாத அச்சமும் பதட்டமும் இருப்பதோடு அதற்குக் காரணமானவர்களும் இத்தகைய மாயாவிகளாக இருப்பதையும் சுட்டிக்காட்டிக் கொண்டே இருக்கிறார் மணியன்.*

*வேறுபாடுகளைக் கடந்த ஒற்றுமை*

*மன்னராட்சிக் காலந்தொட்டே இலங்கையில் பலவிதமான மக்கட்பிரிவுகள் இருந்தாலும் அவர்களிடையே ஒற்றுமையே நிலவி வந்துள்ளது. மன்னர்களும் அந்த ஒற்றுமையைக் காப்பதில் முக்கியப்பங்காற்றியிருக்கிறார்கள்.*

*மனுநீதிச் சோழனை இலங்கையில் எலாரா (எல்லாளன்) என்ற பெயரில் குறிப்பிடுகிறார்கள். தன் தேர் செல்லும்போது இடிபட்ட பௌத்த மடத்தூண்களை பெரும் பொருட்செலவில் மீண்டும் கட்டிக் கொடுத்து பிற மதத்தினர் மனம் புண்படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த அவரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். "துட்டகைமுனு என்ற சிங்கள இளவரசன் சோழ மன்னனை எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்றும் கூட, சோழ மன்னரின் வீரத்தை மிகவும்*

பாராட்டி அவருக்கு ஈமக்கடன்கள் நடந்த இடத்தில் ஒரு பெரிய நினைவு மண்டபத்தை எழுப்பினான். அந்த இடத்தில் இன்றும் இலங்கையின் பிரபுக்கள், தலைவர்கள் ஆகியோர் வரும்போது பேசுவதில்லை, வாத்தியங்கள் வாசிப்பதில்லை, மௌனத்தைக் கடைபிடிக்கிறார்கள்."(ப.38)

1977இல் இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமான பெரும் வகுப்புக் கலவரம் குறித்து விசாரித்த அவருக்கு,
"இன்னும் இலங்கையில் தமிழர்கள் பலருக்கு சிங்களவர்கள் நெருங்கிய நண்பர்களாக இருப்பதைக் காணலாம். கொழும்பில் உள்ள பலரும் தங்கள் வீட்டில் தமிழ் மக்களைக் குடிவைக்க விரும்புகிறார்கள். அவர்களிடையே பகை உணர்ச்சி இல்லை என்பது மட்டுமல்லாமல் ஆழ்ந்த மனிதாபிமானமும் இருக்கிறது. இந்தக் கலவரத்தில் எவ்வளவோ தமிழர்கள் சிங்களவர்கள் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டு காப்பாற்றப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு தந்து போற்றி இருக்கிறார்கள். வீட்டில் அகப்பட்டுக் கொண்டு வெளியே வர முடியாமல் பயந்து கொண்டிருந்த தமிழர்கள் பலருக்கு சிங்கள நண்பர்கள் சாப்பாட்டுக்குத் தேவையான சாமான்களைக் கடையிலிருந்து வாங்கிக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள்" (ப.24)

என்ற தகவல் கிடைக்கிறது. அவர் ஆச்சரியமடைகிறார்.

செல்வா என்ற தமிழ்த் தலைவரின் சமாதியைப் பார்த்து வருந்தும் மணியன் அவர்களிடம்,
"செல்வா ஒரு பெருமை மிகுந்த தலைவர் என்பதில் இரண்டாவது பேச்சே இல்லை"

என உணர்ச்சிவசப்பட்டுப் பேசும் காரோட்டியான ஆல்பர்ட் ஒரு சிங்களவர் என்பதை வியப்புடன் குறிப்பிடுகிறார்.(ப.41)

ஆட்சியாளர்களின் அதிகாரமோகம் காரணமாக வன்முறைகள், வெறுப்பு தூண்டப்படுவதும் அதன் தொடக்கத்தில் மக்களின் பங்கோ விருப்பமோ அதில் இல்லை என்பதுடன், அத்தகைய வன்முறைகளை மக்கள் வெறுக்கிறார்கள் என்பதும் புலனாகிறது. இலங்கையில் இனவாதம் என்ற பெயரில் நிகழ்த்தப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கு ஆட்சியாளர்களின் அரசியல்வாதிகளின் சூழ்ச்சியே ஆரம்பம் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது இலங்கைப் பயணக் கதை.

நூலைப் படிக்கும் வாசகர் மனதில் இலங்கையில் சிங்கள மக்கள் மனதில் தமிழர்கள் மீது வெறுப்பு இல்லை. தமிழர்கள் மத்தியிலும் மிகப்பெரும்பாலானோர் பிரிவினையையோ இனவாதத்தையோ விரும்பவில்லை எனும்போது, இந்த வெறுப்பையும் வன்முறையையும் பரப்பி, வளர்த்து, ஆட்டுவித்து வரும் மாயக்கை யாருடையது என்ற வினா எழுகிறது.

தொகுப்புரை

பயணக் கட்டுரைகளுக்கான நோக்கங்கள் பலவிதமாக அமையும். தாங்கள் சென்ற இடங்களைக் குறித்த தகவல்களைத் தருவதாகவும் அங்கே இருக்கும் வசதிகள், சுற்றிப் பார்க்கும் இடங்கள், நேரங்கள் பற்றிக் கூறுவதாகவும் அமையலாம். மாறாக திரு. மணியனின் இலங்கைப் பயணமானது இலங்கைவாழ் மக்களின் உயரிய பண்பாட்டையும் அன்றாட வாழ்வில் பிற மதத்தவர் மீது அன்பும் மரியாதையும் கொண்டவர்களாக இருக்கும் மாண்பையும் புலப்படுத்துகிறது. அவரது இலங்கைப் பயண நூல், இலங்கையின் கொடிய துயர்களுக்குக் காரணம் அரசியல் சூழ்ச்சியே என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இந்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

- இலங்கை மக்களின் சமய நம்பிக்கைகள், பிற சமயங்களை மதிக்கும் உயர்ந்த பண்பு, ஆலயங்களுக்குள்ளேயே பிற மதத்தவரது பண்டிகைகளைக் கொண்டாடும் உயர் பண்பும் மாண்பும் மிக்கவர்களாக இருந்துள்ளனர். இலங்கை மக்கள் இனத்தின் பெயரிலான வேறுபாடுகளை, வெறுப்புகளை விரும்பவில்லை என்பது உணர்த்தப்படுகிறது.
- இலங்கை வரலாறு, ஆங்கிலேயர் சூழ்ச்சி ஆகியவற்றால் இனவெறுப்பு தோன்றுவதற்கான சாத்தியங்கள் உருவாக்கப்பட்டு அதை அரசியல் தலைவர்கள் வளர்த்துப் பெரிதுபடுத்தியுள்ளனர்.

அரசியல் அரங்கில் பொதுமக்களின் உணர்வுகள் பலியிடப்படுகின்றன. மக்களின் மனதில் வன்முறையின் மூலம் அச்சத்தைத் தோற்றுவித்து அந்தப் பதட்டத்தை மூலம் தங்களுக்கான

*பலனைச் சாதித்துக் கொள்ளும் அரசியல் சுயநலம்தான் இலங்கை என்னும் சின்னஞ்சிறு தீவின் சோதனைகளுக்குக் காரணமாக அமைந்தது. ஆங்கிலேயரின் சூழ்ச்சியும் அரசியல்வாதிகளின் சதிகளும் அப்பாவி மக்களின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கிவிட்டதோடு காலங்காலமாக அவர்களைப் பற்றித் தொடரும் துயராகத் தொடர்கிறதை நூல் வழி அறிய முடிகிறது.*

*துணை நூற்பட்டியல்*

*1. இலங்கைப் பயணக்கதை - மணியன் - ஏப்ரல் 1979 - வெளியீடு : மணியன் பதிப்பகம், சென்னை - 14*

*2. ஈழத்தில் தமிழ் இலக்கியம் - சிவத்தம்பி. கா- 1987 - வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*

*3. நாடோடிகளின் துயர் செறிந்த பாடல்- தொ. நூ - 2008 - கனடா கலை இலக்கிய மன்ற வெளியீடு, சென்னை*

********* ********* ********** ********* ********* ********** ********** **********